மதுரை மாவட்டம்

காலாண்டுத்தேர்வு - 2026

வணிகவியல்

வகுப்பு : **12**

தேதி:21/09/2026

மொத்த மதிப்பெண்கள்: **90**

நேரம்: **3.00** மணி

பிரிவு - I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். (20•1=20)

1. பரந்த அளவு வீச்செல்லையில் அதிகாரப்படி நிலை மட்டங்களின் அளவு _____
அ) அதிகம் ஆ) குறைவு இ) பன்மடங்கு ஈ) கூடுதல்

2. மூலதனச் சந்தையின் பங்கேற்பாளர்------ ஆவர்
அ) தனிநபர் ஆ) நிறுமங்கள் இ)நிதி நிறுவனங்கள் ஈ) மேலே உள்ள அனைத்தும்

3. _____ இதுவே உலகின் பழமையான பங்குச் சந்தையாகும்.
அ) இலண்டன் பங்குச் சந்தை ஆ) பம்பாய் பங்குச் சந்தை
இ) தேசிய பங்குச் சந்தை ஈ) ஆம்ஸ்டர்டான் பங்குச் சந்தை

4. பணியாளர் சுழற்சி வீதம் என்பது நிறுவனத்தில் பணியாளர்களின் நிலை _____ பொழுது ஏற்படுகிறது.
(அ) நிறுவனத்திற்குள் உள்ளே வரும் (ஆ) நிறுவனத்தை விட்டு வெளியே செல்லும்
(இ) சம்பளம் பிரச்சனையின் (ஈ) மேலே குறிப்பிடப்பட்ட எதுவும் இல்லை

5. பணி மாற்றம் என்பது ஒரு _____ ஆட்சேர்ப்பு வளமாகும்.
அ) அக வள ஆ) புற வள (இ) புறத்திறனீட்டல் ஈ) மேலே குறிப்பிடப்பட்ட எதுவும் இல்லை.

6. சந்தையிடுகையில் சந்தையிடுகையாளர் முதலில் தெரிந்து கொள்ள விரும்புவது.
அ) வாடிக்கையாளரின் தகுதி ஆ) பொருளின் தரம்
இ) வாடிக்கையாளரின் பின்புலம் ஈ) வாடிக்கையாளரின் தேவைகள்

7. கீழ்கண்டவற்றுள் கண்ணுக்கு புலப்படாத பொருள் எது?
(a) கல்வி (b)கைபேசி (c) ஆடைகள் (d) வாகனங்கள்

8. நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம் நடைமுறைக்கு வந்த நாள்
அ) **01.01.1986** ஆ) **01.04.1986** இ) **15.04.1987** ஈ) **15.04.1990**

9. _____ என்பவர் நவீன சந்தையியலின் மன்னர் ஆவார்.
அ) நுகர்வோர் ஆ) மொத்த வியாபாரி
இ) உற்பத்தியாளர் ஈ) சில்லறை வியாபாரி

10. பின்வருவனவற்றுள் மேலாண்மையின் முதன்மை பணி அல்ல ?
அ) முடிவெடுத்தல் ஆ) திட்டமிடுதல் இ) ஒழுங்கமைத்தல் ஈ) பணிக்கமர்த்துதல்

11. பணச் சந்தையில் முக்கிய பங்காற்றும் அமைப்பு _____
அ) வணிக வங்கி ஆ) இந்திய ரிசர்வ் வங்கி இ) பாரத ஸ்டேட் வங்கி ஈ) மைய வங்கி

12. கூட்டு முதலீட்டு திட்டங்களின் செயல்பாட்டை பதிவு செய்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் _____ எனப்படுகிறது.
அ) பரஸ்பர நிதிகள் ஆ) பட்டியல் இ) மறுபுறத்தோற்றமற்ற பத்திரங்கள் ஈ) புறத்தோற்றமற்ற பத்திரங்கள்

13. பணிவழியற்ற பயிற்சி எங்கு அளிக்கப்படுகிறது? அ) வகுப்பறையில் ஆ) தொழிற்சாலைக்கு வெளியே
இ) வேலையில்லா நாட்களில் ஈ) விளையாட்டு மைதானத்தில்

14. இணையத்திற்கு நுழைவு வாயில் என்பது
அ) போர்டல் ஆ) சிபியு இ) மோடம் ஈ) வெப்நராங்

15. பொருத்தமற்ற விண்ணப்பத்தாரரை நீக்குவதற்கான செயல்முறை_____ என்று அழைக்கப்படுகிறது
அ) தேர்வு ஆ) ஆட்சேர்ப்பு இ) நேர்காணல் ஈ) தூண்டுதல்

16. குறியிலக்கு மேலாண்மை செயற்முறையின் முதல் நிலை எது?
அ) முக்கிய முடிவு பகுதியை நிர்ணயிப்பது ஆ) நடவடிக்கைகளை மதிப்பீடு செய்வது
இ) குறிக்கோள்களுடன் வளங்களைப் பொருத்துவது ஈ) அமைப்பின் குறிக்கோள்களை வரையறுப்பது

17. நவீன சந்தையிடுகையுடன் தொடர்புடைய சரியான ஒன்றை தேர்ந்தெடுக.
அ) இடம் ஆ) பொருள் இ) செயல்திறன் ஈ) மேம்பாடு

18. பொருத்துக

1) மறைமுக வளங்கள்	-	i) புறத்திறனீட்டல்
2) திறன் சோதனை	-	ii) நுண்ணறிவுச் சோதனை
3) ஆளுமைச் சோதனை	-	iii) ஆர்வச் சோதனை
4) நேரடி வளங்கள்	-	iv) வளாக தேர்வு

	1	2	3	4
அ)	I	ii	iii	iv
ஆ)	ii	iii	iv	i
இ)	iv	iii	I	ii
ஈ)	iii	I	ii	iv

19. கூற்று (A): புறத்தோற்றமற்ற பத்திரங்கள் உருவாக்கம் என்பது நிறுவன பதிவாளரால் காகித வடிவிலான பங்குச் சான்றிதழை அழித்து புறத்தோற்றமில்லாத வகையில் பத்திரங்களாக மாற்றல் என்பதாகும்.
காரணம் (R): காகிதப் பரிவர்த்தனைகளை விட புறத்தோற்றமற்ற பத்திர வர்த்தகம் விரைவான பரிவர்த்தன்னைகள் மற்றும் வர்த்தகத்தில் அதிக செயல்திறன் ஆகியவற்றை வழங்குகிறது
அ) A மற்றும் R சரி மேலும் R என்பது A யிற்கான சரியான விளக்கம்
ஆ) A மற்றும் R சரி மேலும் R, என்பது A யிற்கான தவறான விளக்கம்
இ) A சரி ஆனால் R தவறு ஈ) A தவறு ஆனால் R சரி

20. பொருந்தாத ஒன்றை கண்டறிக
அ) குடும்ப சந்தை ஆ) தூய உலோகச் சந்தை இ) தேசிய சந்தை ஈ) உள்ளூர் சந்தை

பிரிவு - II

குறிப்பு: ஏதேனும் ஏழு கேள்விகளுக்குப் பதிலளிக்கவும். வினா எண். 30 ற்கு கட்டாயமாக பதிலளிக்கவும். (7*2=14)

21. திட்டமிடுதல் என்றால் என்ன?
22. அரசுப் பத்திரங்கள் சந்தை என்றால் என்ன?
23. துணைத் தரகர் என்றால் என்ன?
24. மனித வள மேலாண்மை என்றால் என்ன?
25. நேர்காணல் என்றால் என்ன?
26. ஒழுங்குமுறை சந்தை என்றால் என்ன?
27. பகுமை சந்தையிடுதல் என்றால் என்ன?
28. கலப்படத்திற்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.
29. ஜான் F கென்னடி கூறிய நுகர்வோர் உரிமைகள் யாவை?
30. போட்டியாளர்களால் அடையாளம் காணப்படாத ஒரு வரையறுக்கப்பட்ட பிரிவு மக்களை அடையாளம் கண்டு அந்த வாடிக்கையாளாரின் தேவைகளை பூர்த்தி செய்ய தேவையான அனைத்து சந்தையிடுதல் முயற்சிகளையும் செய்வதே_____ எனப்படும்

பிரிவு - III

குறிப்பு: ஏதேனும் ஏழு கேள்விகளுக்குப் பதிலளிக்கவும். வினா எண். 40 ற்கு கட்டாயமாக பதிலளிக்கவும்.

31. குறியிலக்கு மேலாண்மை யின் ஏதேனும் மூன் று செயல்முறைகளைப் பட்டியலிடுக. (7*3=21)
32. மூலதனச் சந்தையின் ஏதேனும் இரண்டு பணிகளை விளக்குக.
33. கலைமான் மற்றும் முடவாத்து - விளக்குக.
34. ஆட்சேர்ப்புச் செயல்பாட்டில் உள்ள படிநிலைகளை கூறுக
35. சந்தையிடுகையின் நோக்கங்கள் யாவை? (ஏதேனும் மூன்று)
36. சந்தையில் என்னென்ன பொருள்களை சந்தையிட முடியும் என்பதை தெரிவிக்கவும். (ஏதேனும் 3)
37. நுகர்வோரியல் குறித்து இயற்றப்பட்ட முக்கியச்சட்டங்கள் யாவை? (ஏதேனும் மூன்று)
38. ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான பாதுகாப்பு உரிமைகள் பற்றி நீவிர் அறிவது என்ன?
39. மேலாண்மையை நிர்வாகத்திலிருந்து வேறுபடுத்துக. (ஏதேனும் மூன்று)
40. _____ மற்றும் _____ கொண்டு நுண்ணறிவு எண் கணக்கிடப்படுகிறது.

பிரிவு - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். (5*7=35)

41. அ) மேலாண்மையின் பல்வேறு பணிகளை விளக்குக. (ஏதேனும் ஐந்து) (அல்லது)
ஆ) மூலதனச் சந்தையின் பல்வேறு பணிகளை விளக்குக. (ஏதேனும் ஐந்து)
42. அ) பங்கு பரிவர்த்தனைக்கும் பண்டமாற்று பரிவர்த்தனைக்கும் வேறுபாடுகளை தருக (ஏதேனும் 5) (அல்லது) ஆ) செபியின் அதிகாரங்களை விவரி. (ஏதேனும் ஐந்து)
43. அ) மனித வள மேலாண்மையின் முக்கியத்துவத்தை விளக்குக. (ஏதேனும் ஐந்து) (அல்லது) ஆ) நுகர்வோர் எவ்வாறு சுரண்டப்படுகிறார்கள்? (ஏதேனும் ஐந்து)
44. அ) பல்வேறு வகையான சோதனைகளை சுருக்கமாக விளக்குக (ஏதேனும் ஐந்து) (அல்லது) ஆ) சந்தைகள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது? விவரி. (ஏதேனும் ஐந்து)
45. அ) சந்தையிடுகை கலவையின் கூறுகளை குறிப்பிடுக. (அல்லது)
ஆ) விதிவிலக்கு மேலாண்மையின் குறைபாடுகள் பற்றி விவாதிக்க. (ஏதேனும் ஐந்து)
46. அ) ஆட்சேர்ப்பின் முறையில் உள்ள சமீப கால போக்குகளை விளக்குக (அல்லது)
ஆ) நவீன சந்தையிடுகையில் கையாளப்படும் ஏதேனும் இரண்டு முறைகளை விளக்குக.
47. அ) சிறு குறிப்பு வரைக: (i) இணைய வழி நேர்காணல் (ii) குழு நேர்காணல் (அல்லது)
ஆ) நுகர்வோரின் பொறுப்புகளைப் பட்டியலிடுக.